'திருமயிலாடுதுறை' என்ற பெயர் வைக்க வேண்டுமென்று உறுதி சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பெயரைச் சூட்டுவதற்கு இனிமேலாவது அரசு செயல்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 'மாயூரம்' என்ற பெயர் புகைவண்டி நிலையத்தில் மாற்றப்பட்டால்தான் பொருத்தமாக இருக்கும். இதைப்பற்றி நாம் மத்திய அரசுக்கு எழுதி, அவர்கள் அதற்கு ஒப்புக்கொண்டால் அப்படிச் செய்யலாம். இப்போது அங்கே எந்த மயிலும் ஆடிக்கொண்டிருக்கவில்லை.

டாக்டர் ச. அ. சின்னராசு: தலைவர் அவர்களே, ஜாதியின் அடிப்படையில் இருக்கின்ற ஊர்களின் பெயர்களை மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினக்கள்-விடைகளுக்கான நேரம் முடிவுறுவதால், வினக்கள்-விடைகளுக்கான நேரத்தை நீட்டிக்க பேரவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

தமிழ் நாடு பால், பால் பொருள்கள் உற்பத்தி, விற்பனைச் சங்கம்.

* 515 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) "தமிழ்நாடு மில்க் அண்ட் மில்க் பிராடக்ட்ஸ் மேனுபேக்சரர்ஸ் அண்ட் டீலர்ஸ் அசோசியேஷன், ஊத்துக்குளி" இடமிருந்து விற்பனை வரி குறித்து விண்ணப்பம் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) வெண்ணெய் எடுத்த பாலிலிருந்து தயாரிக்கப்படும் தயிருக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

மனித முடியை உரமாகப் பயன்படுத்தல்

* 516 வினா—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மனித உரோமத்தை உரமாகப் பயன்படுத்தும் திட்டத்தை அரசு ஆய்வு செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS